# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 228/மா/2017**
**ஆணை நாள்:11–06–2019**

**திரு. கே. எஸ். மணவாளன்,**
**திருச்சிராப்பள்ளி.** – முறையீட்டு மனுதாரர்

**ஆணையர்,**
**திருச்சி மாநகராட்சி,**
**திருச்சிராப்பள்ளி.** – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எண்.66, பெரிய கம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி என்ற முகவரியில் வசிக்கும் திரு. கே. எஸ். மணவாளன் என்பவரது முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.228/2017 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் ஸ்ரீரங்கம் கோட்டம், உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம், எண்.66, பெரிய கம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி என்ற முகவரியில் வசிக்கும் திரு. கே.எஸ்.மணவாளன் என்பவர் தனது 21.11.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் திரு. C. தங்கராஜ் என்பவர் கதவு எண்.65, பெரிய கம்மாளத் தெருவில் உள்ள தனது பழைய கட்டிடத்தின் முழு பகுதியையும் தரைமட்டமாக இடித்துவிட்டு

புதிதாக காம்ப்ளக்ஸ் கட்டி வருவதாகவும், மேற்குறிப்பிட்ட கட்டிட உரிமையாளர் முறைகேடாக கட்டிடத்தை கட்டியதோடல்லாமல் முறையீட்டு மனுதாரரது வீட்டைச் சுற்றி பில்லர்கள் போட்டு சேதப்படுத்தியுள்ளதாகவும், தொலைக்காட்சி பெட்டி வைக்கும் அறை மற்றும் E.B. Box சுவர் மற்றும் ஒயர்கள் ஆகியவற்றை சேதமாக்கியுள்ளதாகவும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், உதவி ஆணையரின் முன்னிலையில் சேதமடைந்த அனைத்து பகுதிகளையும், E.B. சம்பந்தப்பட்ட அனைத்து பகுதிகளையும் சரி செய்து கொடுப்பதாக கட்டடம் கட்டிவரும் திரு. C. தங்கராஜ் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், கட்டிட அனுமதி மறுக்கப்பட்டிருந்தும் கட்டிட உரிமையாளர் அதனை பொருட்படுத்தாமல் தொடர்ந்து கட்டிடத்தை கட்டி வருவதாகவும், உதவி ஆணையர் முன்னிலையில் பெறப்பட்ட திரு. C. தங்கராஜ் வாக்குமூலத்தில் சாட்சியாக அதிகாரிகள் கையொப்பமிடவில்லை என்றும், தன்னை ஏமாற்றி தன்னிடம் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் கோட்டம் மேற்படி கட்டிடத்தின் மீது எவ்விதமான அறிவிப்பும் ஒட்டவில்லை என்றும், தனது கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க ஆவண செய்ய கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு 29.11.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம், உதவி ஆணையர் தனது 26.12.2017 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள திரு. C. தங்கராஜ் என்பவரால் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடத்திற்கு மாநகராட்சி சட்டவிதிகளின்படி அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்றும், அனுமதியின்றி கட்டடம் கட்டும் கட்டிடதாரர் மாநகராட்சி அறிவிப்பினை பொருட்படுத்தாது மேற்கொண்டு கட்டிடப் பணியை துவக்கியதால், கட்டிடம் பணி நிறுத்தம் (stopwork notice) அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்றும், அதன் தொடர் நடவடிக்கையாக மாநகராட்சி சட்ட விதிகளின்படி குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு குற்றத்தாள் சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது என்றும், நீதிமன்ற வழக்கு எண்.STC No.4/2017 நாள் 31.01.2017ன் படி நீதிமன்றத்தால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டது என்றும், அபராதம் விதிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் உரிய கட்டணங்கள் செலுத்தி கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் செய்ததற்கு கட்டப்பட்ட கட்டிடமானது மாநகராட்சியின் கட்டிட விதிமுறைகளுக்கு

புறம்பாக கட்டிக் கொண்டிருப்பதால் கட்டிட அனுமதி வழங்க இயலாது என கட்டிட அனுமதி மறுக்கப்பட்டது என்றும், தொடர் நடவடிக்கையாக அனுமதியின்றி கட்டப்படும் கட்டுமான பணியினை நிறுத்திட சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 09.01.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 06.02.2019 அன்று முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் திருச்சி மாநகராட்சி நகரளவு எண்.126, பிளாக் எண்.14, கதவு எண்.65, பெரிய கம்மாள தெருவில் பழைய கட்டிடத்தின் முழுப் பகுதியையும் தரைமட்டமாக இடித்துவிட்டு புதியதாக அடுக்குமாடி கட்டிடம் கட்டி வருவதாகவும், கட்டிடம் கட்டுவதற்காக அமைக்கப்பட்ட தூண்களால் தனது வீட்டின் சுவரின் அடிதளம் பழுதடைந்துள்ளதாகவும், E.B Box, ஒயர்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டி வைக்கும் அறை பழுதடைந்துள்ளதாகவும் மேற்சொல்லப்பட்ட திரு. C. தங்கராஜ் என்பவரால் கட்டடம் கட்டியதால் ஏற்பட்ட பழுதுகளை அவரே சரிசெய்து கொடுத்தால் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 09.01.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 06.02.2019 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் இளநிலை பொறியாளர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில், மனுதாரரின் வீட்டின் அருகில் திரு. C. தங்கராஜ் என்பவர் கட்டிடம் கட்டி வருகிறார் என்றும், கட்டிட பணி ஆரம்பித்த பின்பு கட்டிட அனுமதி கோரியதால் அனுமதி அளிக்கவில்லை என்றும், சட்ட விரோதமாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு, அண்மையில் இடப்பட்ட மாண்பமை உயர்நீதிமன்ற ஆணையின்படி மின் இணைப்பு துண்டிக்கவும், குடிநீர் இணைப்பு துண்டிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மனுதாரர் தனது வீடு சேதம் அடைந்துள்ளது என்று புகார் கூறியதால் கட்டிட உரிமையாளர் திரு. C. தங்கராஜ் வீட்டை சரிசெய்து கொடுக்க இருவருக்குள் சமரசம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 07.03.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 04.04.2019 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் மண்டலம் உதவி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் 15 நாட்களில் இது குறித்த இறுதி அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையர் 03.06.2019 நாளிட்ட அறிக்கையில் திரு. கே.எஸ். மணவாளன் என்பவரது முறையீட்டு மனு தொடர்பாக 04.04.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தின்படி, மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாநகராட்சி கட்டிட விதிகளின்படி அறிவிப்பு மூலம் மூடி முத்திரையிடப்படும் என 06.04.2019 அன்று சம்மந்தப்பட்ட கட்டிடதாரருக்கு முறையாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கையாக மூடி முத்திரையிடும் பணி மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49, 56 மற்றும் 51-ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து இறுதி அறிவிப்பாணை வழங்கப்பட்டு ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டு, 03.06.2019 அன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடம் உரிய விதிகளின்படி மூடி முத்திரையிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் கட்டிடம் மூடி முத்திரையிடப்பட்டதற்கான புகைப்படங்களையும் அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் விசாரணையின்போது அளிக்கப்பட்ட அறிவுரைகளை ஏற்று புகாருக்குள்ளான கட்டிடம் மாநகராட்சியால் மூடி முத்திரையிடப்பட்டதைத் தொடர்ந்து இத்துடன் இவ்வழக்கு முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ). 14/6/2019

சென்னை-600 032

14/6/19

14/6/19

பெறுநர்

1. திரு. கே. எஸ். மணவாளன்,
   த/பெ. கே. சடகோபன்,
   66, பெரிய கம்பாளத் தெரு,
   (பின்புறம்), பழைய பாஸ்போர்ட் ஆபீஸ்,
   திருச்சிராப்பள்ளி – 620 008.

2. ஆணையர்,
   திருச்சி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.

3. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.

<u>நகல்</u>

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி